# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை : திரு. செ. தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 38 /2017**

திரு. வீ. தங்கராசு,
த/பெ வீரப்பன்,
மத்தகிரி கிராமம்,
கடவூர் வட்டம், கரூர் மாவட்டம்–621 313. . . . மேல்முறையீட்டாளர்
(திரு. வீ. தங்கராசு)

எதிர்

1) செயற் பொறியாளர்/இ&ப/குளித்தலை,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
98, சிறுபூங்கா தெரு, காவேரி நகர்,
குளித்தலை – 639 104.

2) உதவி செயற் பொறியாளர்/இ&ப/சிந்தாமணிபட்டி,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11 கே.வி. துணை மின்நிலைய வளாகம்,
சிந்தாமணிபட்டி, குளித்தலை தாலுக்கா,
கரூர் – 621 301.

3) உதவி பொறியாளர்/இ&ப/கொசூர்,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
7/17 பாளையம், திருச்சி மெயின் ரோடு,
கொசூர், குளித்தலை தாலுக்கா,
கரூர் – 621 313. . . . எதிர்மனுதாரர்
(திரு. N. வெங்கடேஷ், உதவி செயற்பொறியாளர்/ சிந்தாமணிபட்டி)

**<u>கேட்புரை நாள் : 8–9–2017</u>**

**<u>ஆணை நாள் : 09.10.2017</u>**

திரு. வீ. தங்கராசு, த/பெ வீரப்பன், தெற்கு கல்லுப்பட்டி, கடவூர் வட்டம், கரூர் மாவட்டம் அவர்களின் 15.5.2017 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.38/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 8.9.2017 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**<u>ஆணை</u>**

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை</u>:**

மேல்முறையீட்டாளர் அவரின் பூந்தோட்ட மின் இணைப்பை ரத்து செய்து விட்டு சுயநிதி திட்டத்தின் கீழ் ரூ.25000/– 2.7.10 அன்று ரூ.500/– முன் பணம் செலுத்தியதன் அடிப்படையில் மின் இணைப்பு வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

**2. <u>வழக்கின் சுருக்கம்</u>:**

2.1 மனுதாரர் மத்தகிரி கிராமம் புல எண்.387/1B 10 HP விவசாய மின் இணைப்பு வேண்டி 29.4.2010 ம் ஆண்டு பதிவு எண். 19/2010 ஆக பதிவு செய்து உள்ளார். சுயநிதி திட்டத்தின் கீழ் மின்இணைப்பு பெற ரூ.500/– நாள் 2.7.2010 அன்று செலுத்தியுள்ளார். மேலும், தேவையான ஆவணங்களையும் சமர்ப்பித்துள்ளார். மேலும், மனுதாரர் சுயநிதி திட்ட வரிசையில் மின்இணைப்பு பெற கால தாமதமாகும் என்பதால் விகிதப்பட்டி IIIA ன் கீழ் 13.7.2010 முதல் மின்இணைப்பு பெற்று பயன்படுத்தி வருகிறார்.

2.2 மனுதாரர் சுயநிதி திட்டத்தின் கீழ் மின்இணைப்பு வழங்க வேண்டி உரிமதாரரை அணுகிய போது மனுதாரரிடம் IIIA- ல் பூந்தோட்ட மின் இணைப்பு பெற்றுள்ளதால் மேற்படி மின் இணைப்பை விவசாய வீதப்பட்டி IV–ற்கு மாற்றம் செய்ய இயலாது என்று தெரிவிக்கப்பட்டது.

2.4 இதனால் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் கரூர் மின் பகிர்மான வட்டத்தின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகியுள்ளார். மன்றம் தன்னுடைய ஆணையை 3.5.2017 அன்று வழங்கியுள்ளது.

3. <u>மன்றத்தின் தீர்வு</u>

3.1 கரூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 3.5.2017 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

" *மனுதாரர் தான் ஏற்கனவே* IIIA*1ல் பூந்தோட்ட இணைப்பு பெற்றுள்ளதாகவும், சுய நிதி திட்டத்தின் ரூ.25,000/– கீழ் மின்இணைப்பு பெற ரூ.500/– முன்பணம் 2.7.2010 செலுத்தி உள்ளதாகவும் எனவே மேற்படி மின்இணைப்பினை விகிதப்பட்டி* IV*க்கு மாற்றம் செய்ய உத்திரவு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.*

*தமிழ்நாடு மின் வாரிய விகிதப்பட்டி ஆணையின்படி Tariff Order நாள் 11.12.2014ன் படி The LT Tariff IIIA(1) consumer is eligible to apply for LT tariff IV as and when such applicant becomes eligible to get regular supply vide LT tariff IV as per seniority maintained for that purpose by the licences எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*மேற்படி விதிகள் தொடர்பாக தலைமையகத்திற்கு அறிவுரை கோரப்பட்டதில் தலைமையக கடிதம் Lr.No.SE/RE&-I(D)-EE-RE-A1-F.Doc-D.729–14, Dt.1.10.2014 கடிதத்தில்*

*In as much as RSFS scheme has not been discussed in the tariff order, the existing procedures in the tariff order under LT IIIA(1) shall have to be followed என்று குறிப்பிட்டுள்ளது.*

*மேற்கண்ட விதிகள் மற்றும் சுற்றறிக்கையின்படி ஆராய்கையில் மனுதாரர் LT tariff IVன் சாதாரண வரிசைகிரமம் கீழான பதிவு மூப்பு வரும்பொழுது தான் மனுதாரருக்கு அவரது மின்இணைப்பு வீதப்பட்டி IVன் கீழ் மாற்றம் செய்ய இயலும் எனவும் சுயநிதி திட்டம் ரூ.25,000ன் கீழ் விவசாயம் மின்இணைப்பு வழங்க இயலாது எனவும் வாரிய நடைமுறைகளுக்கேற்ப அறியப்படுகின்றது.*

*மேலும், மனுதாரர் மேற்படி கிணற்றிற்கு வீதப்பட்டி IIIA1ல் இருந்து IVக் கு மாற்றம் செய்வது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார் மேறப்டி வழக்கு OS No.765/2016ன் கீழ் பதிவு செய்யப்பட்டு குளித்தலை மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது.*

*எனவே, மேற்படி மனு தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் இம்மன்றம் இம்மனு மீது யாதொரு முடிவும் அறிவிக்க இயலாமல் இந்தளவிலேயே முடித்து வைக்கப்படுகிறது.”*

**4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:</u>**

4.1 மத்தகிரி கிராமத்தில் புல எண்.387/1B 10 HP விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் 29.4.2010ஆம் ஆண்டு பதிவு எண்.19/2010 பதிவு செய்து உள்ளார்.

4.2 விவசாய விண்ணப்பத்திற்கு சுயநிதி திட்டத்தின் 25,000ன் அடிப்படையில் ரூ.500 முன்பணம் 2.7.2010 ல் செலுத்தியுள்ளார்.

4.3 தற்சமயம் 387/3Bயில் IIIA1 பூந்தோட்ட மின்இணைப்பு 13.7.2010ல் மின்இணைப்பு SC 308 பெற்றுள்ளார்.

4.4 4.4.2013ல் கொசூர் இளமின் பொறியாளர் அவர்களிடம் (NO) சான்று 7 ஆவணங்கள் கேட்டார்கள். ஆனாலும் மின்இணைப்பு வழங்க முடியாது என்று சொன்னார்கள். <u>மேல்முறையீட்டாளர் ஒழுங்குமுறை ஆணையத்திடம் புகார் செய்தார்.</u> கூட்டத்திற்கு அழைத்து உங்கள் விண்ணப்பத்திற்கு முன் 179 நபர்கள் உள்ளனர். அவர்களுக்கு

மின்இணைப்பு வழங்கப்பட்ட பின்னர் IIIA1 மின்இணைப்பு மாற்றம் செய்து 25,000/– அடிப்படையில் மின்இணைப்பு வழங்கப்படும் என்று அறிவித்தார்கள்.

4.5 20.7.2015ல் இளமின்பொறியாளர் கொசூர் அலுவலுகத்திலிருந்து (NO) சான்று 7 ஆவணங்கள் வழங்க வேண்டும் என்று சொன்னார்கள் நான் அதை வழங்கி விட்டேன்.

4.6 ஆகையால் IIIA1ன் பூந்தோட்ட மின்இணைப்பு ரத்து செய்து விட்டு சுயநிதி திட்டம் ரூ.25,000/ல் ரூ.500 முன் பணம் 2.7.2010 அன்று செலுத்தியதன் அடிப்படையில் மின்இணைப்பு வழங்க உத்திரவு வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

4. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் :</u>

4.1 திரு. வீ. தங்கராசு, த/பெ வீரப்பகவுண்டர், புல எண்.387/3Bல் உள்ள ஆழ்குழாய் கிணற்றிற்கு சிறப்பு சுயநிதித்திட்டம் ரூ.25,000/–ன் கீழ் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டது. பதிவு எண்.19/29.4.2010 மின்பளு 10 HP ஆகும்.

4.2 விவசாய விண்ணபத்திற்கு சிறப்பு சுயநிதித்திட்டம் ரூ.25,000/–த்திற்கு ரூ.500/– பதிவு கட்டணம் செலுத்தியுள்ளார். PR No.TRK041RS1S375 dt.2.7.2010 ஆகும்.

4.3 உதவி மின்பொறியாளர்/இயக்குதலும் காத்தலும்/தெற்கு/தோகைமலை பிரிவு அலுவலர் அவர்களால் மேற்படி புல எண்ணில் (387/3B) உள்ள ஆழ்குழாய் கிணற்றிற்கு வீதப்பட்டி IIIA1ல் மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மின்இணைப்பு எண்.057–006–308 மின்பளு 7.5 HP, நாள்.13.7.2010 ஆகும். மேற்படி மின்இணைப்பு இன்று வரை இயக்கத்தில் உள்ளது.

4.4 இளமின் பொறியாளர்/இயக்குதலும் காத்தலும்/கொசூர் பிரிவு அலுவலர் அவர்களால் 4.4.2013 தேதியிட்ட அறிவிப்பு கடிதத்தில் திரு. தங்கராசு அவர்களுக்கு சிறப்பு சுயநிதித்திட்டம் ரூ.25,000 த்தின் கீழ் விவசாய விண்ணப்ப எண்.19/2010–11 நாள்.29.4.2010 க்கு மின்இணைப்பு

வழங்க புல எண்.387/3Bல் உள்ள பூமிக்குண்டான உரிய வருவாய் ஆவணங்கள் வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.

4.5 சிறப்பு சுயநிதித்திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு வேண்டிய புல எண்.387/3Bல் ஆழ்குழாய் கிணற்றிற்கு வீதப்பட்டி TF IIIA1ல் மின்இணைப்பு உள்ளதால் (மின்இணைப்பு எண்.057–006–308 பள்ளிக்கவுண்டனூர் பகிர்மானம், மின்பளு 7.5 HP மின்இணைப்பு வழங்கப்பட்ட நாள் 13.7.2010) சிறப்பு சுயநிதித் திட்டம் ரூ.25,000/– த்தின் கீழ் மின்இணைப்பு வழங்க இயலாது. சாதாரண வரிசையின் கீழ்தான் மின்இணைப்பு வழங்க முடியும் என்பதனை தெரிவிக்கப்படுகிறது.

4.6 தமிழ்நாடு மின்வாரிய விகிதப்பட்டி ஆணையின் படி Tariff Order நாள் 11.12.2014ன் படி "*The LT Tariff III* A1 *consumer is eligible to apply for LT tariff IV as and when such applicant becomes eligible to get regular supply vide LT tariff IV as pe seniority maintained for that purpose by the licencees எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*மேற்படி விதிகள் தொடர்பாக தலைமையகத்திற்கு அறிவுரை கோரப்பட்டதில் தலைமையாக கடிதம் Lr.No.SE/RE&-I(D)-EE-RE-A1-F.Doc-D.729–14, Dt.1.10.2014 கடிதத்தில்*
*In as much as RSFS scheme has not been discussed in the tariff order, the existing procedures in the tariff order under LT IIIA(1) shall have to be followed என்று குறிப்பிட்டுள்ளது.*

4.7 மேற்கண்ட விதிகள் மற்றும் சுற்றறிக்கையின்படி ஆராய்கையில் மனுதாரர் LT Tariff IVன் சாதாரண வரிசை கிரமம் கீழான பதிவு மூப்பு வரும்பொழுதுதான் மனுதாரருக்கு அவரது மின்இணைப்பு வீதப்பட்டி IVன் கீழ் மாற்றம் செய்ய இயலும் எனவும் சுயநிதிதி திட்டம் ரூ.25,000/–ன் கீழ் விவசாய மின்இணைப்பு வழங்க இயலாது எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

4.8 மேலும், மனுதாரர் மேற்படி கிணற்றிற்கு வீதப்பட்டி IIIA1யிலிருந்து IVக்கு மாற்றம் செய்வது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு OS No.165/2016ன் கீழ் பதிவு செய்யப்பட்டு குளித்தலை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது. தற்சமயம் வழக்கு நிலுவையில் உள்ளது. நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளதால், நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

**5. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>**

**5.1** மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக **8.9.2017** அன்று மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை நடத்தப்பட்டது.

**5.2** மேல்முறையீட்டாளர் திரு. வீ. தங்கராசு அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

**5.3** எதிர்மனுதாரர் சார்பில் N. வெங்கடேஷ், உதவி செயற்பொறியாளர்/சிந்தாமணிபட்டி அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

**6. மேல் முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்**

**6.1** மேல்முறையீட்டாளர் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் எடுத்துரைத்தார். குடிநீர் தேவைக்காக புல எண் **387/3B** –க்கு IIIA1 பூந்தோட்ட மின் இணைப்பு பெற்றுள்ளார். அவர் பூந்தோட்ட மின் இணைப்பு பெற்றுள்ளதால் சுய நிதி திட்டத்தில் மின் இணைப்பு Tariff IV ஆக மாற்றம் செய்ய இயலாது என்று தெரிவித்தார்கள்.

6.2 பூந்தோட்ட மின்இணைப்பு கேட்டு விண்ணப்பித்த போதே சுயநிதி திட்டத்தின் அடிப்படையில் விவசாய மின் இணைப்பு Tariff IV ஆக மாற்றம் செய்ய இயலாது என்று தெரிவித்திருந்தால், அவர் பூந்தோட்ட மின் இணைப்பை பெற்றிருக்க மாட்டேன் என்று தெரிவித்தார்.

6.2 மேல்முறையீட்டாளர் அவரின் கிணற்றிற்கு வீதப்பட்டி IIIA1 –ல் இருந்து IV–க்கு மாற்றம் செய்வது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளதாகவும் மேற்படி வழக்கு OS No.165/2016ன் கீழ் பதிவு செய்யப்பட்டு குளித்தலை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்தார்.

**7. எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்**

7.1 எதிர்மனுதாரார் தன்னுடைய பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் எடுத்துரைத்தார். மேலும் மனுதாரர் ஏற்கனவே IIIA1 என்ற விகிதப் பட்டியலில் (பூந்தோட்ட மின் இணைப்பு) பெற்று விட்டதால் தற்பொழுது நடைமுறையில் உள்ள வாரிய விதிகளின்படி சுய நிதி திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு வழங்க இயலாது என்றும், சாதாரண வரிசை அடிப்படையில் நிர்ணயிக்கப்படும், வருடாந்திர இலக்கீட்டின்படி வரிசைக்கிரமமாக வாரிய விதிகளின்படி மின் இணைப்பு வழங்க முடியும் என்றும் தெரிவித்தார்.

7.2 மனுதாரர் மேற்படி கிணற்றிற்கு வீதப்பட்டி IIIA1யிலிருந்து IVக்கு மாற்றம் செய்வது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு OS No.165/2016ன் கீழ் பதிவு செய்யப்பட்டு குளித்தலை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது. தற்சமயம் வழக்கு நிலுவையில் உள்ளது.

7.3 நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளதால், நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

## 8. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

8.1 எதிர்மனுதாரர் தன்னுடைய பதிலுரையில் திரு. வீ. தங்கராசு, த/பெ வீரப்பன் அவர்களின் கிணற்றிற்கு வீதப்பட்டி IIIA1யிலிருந்து IVக்கு மாற்றம் செய்வது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளதாகவும் மேற்படி வழக்கு OS No.165/2016ன் கீழ் பதிவு செய்யப்பட்டு குளித்தலை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையிலுள்ளது என்ற தகவலையும் தெரிவித்துள்ளார்.

8.2. மேல்முறையீட்டாளரும் அந்த வழக்கு இன்றுவரை நிலுவையில்தான் உள்ளது என்றும், முடிவுக்கு வரவில்லை என்றும் கேட்புரை நாளில் தெரிவித்துள்ளார்.

8.3. இந்த வழக்கில் மேல்முறையீட்டாளர் திரு. வீ. தங்கராசு, த/பெ வீரப்பன் அவர்களின் மேற்படி கிணற்றிற்கு வீதப்பட்டி IIIA1யிலிருந்து IVக்கு மாற்றம் செய்வது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு எண் OS No.165/2016 குளித்தலை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அந்த வழக்கு நிலுவையிலுள்ளதால் இதுகுறித்து மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 17(4)ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“17. xxx xxx xxx*

*xxx xxx xxx*

*(4) கீழ்க் குறிப்பிட்டவற்றை பின்பற்றினாலொழிய எந்த முறையீடும், மின்சார குறைதீர்ப்பாளரால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.*

*அ) முறையீட்டாளர், மின்சார குறைதீர்ப்பாளருக்கு முறையீடு செய்வதற்கு முன், முறையீட்டில் குறிப்பிட்ட உரிமதாரர் குறைகளை மன்றத்தில் எழுத்து மூலம் முறையீடு செய்திருந்து அந்தமுறையீட்டை மன்றம் தள்ளுபடி செய்திருக்க வேண்டும். அல்லது முறையீடு பதிவு செய்த ஐம்பது நாட்களுக்குள்_ பதில் பெறப்படாமல் இருந்திருக்க வேண்டும் அல்லது முறையீட்டாளருக்கு மன்றம் அளித்த பதிலில் திருப்தி ஏற்படாமல் இருந்திருக்க வேண்டும். பிரிவு 17 (1) ல் விவரிக்கப்பட்டுள்ள பொதுத்தன்மையான முறையீட்டிற்கு இது பொருந்தாது.*

*ஆ) முறையீடு, முறையீட்டிற்கான நிகழ்வு நடந்த மூன்று மாதங்களுக்குள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.*

*இ) பெறப்படும் முறையீடு தீர்க்கப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும். மின்சார குறைதீர்ப்பாளரால் முந்திய விசாரணை நடவடிக்கைகள் மூலமாக தீர்க்கப்பட்ட நுதல் பொருள் (subject matter) கொண்ட முறையீடு, அதே முறையீட்டாளரிடமிருந்து தனியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறையீட்டாளர்களுடன் சேர்ந்தோ அல்லது எத்தரப்பினரிடமிருந்து வந்தாலும், ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*ஈ) முறையீட்டின் குறிப்பிட்ட புகார் ஏதாவது நீதி மன்ற நடவடிக்கையில் நிலுவையில் இருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதி மன்றம் ஏற்கனவே கட்டளையோ, தீர்ப்போ அல்லது இறுதியாணையோ வழங்கியிருந்தாலோ, அவ்வாறான புகார் கொண்ட முறையீடாக இருக்கக் கூடாது.*

*உ) முறையீடு அற்பமானதாகவும் எரிச்சல் தரக்கூடியதாகவும் இருக்கக் கூடாது.”*

**8.4** மேற்கண்ட விதியினை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது முறையீட்டிலுள்ள புகார் சம்பந்தமான வழக்கு நீதிமன்ற நடவடிக்கையிலிருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதிமன்றம் ஏற்கெனவே கட்டளையோ, தீர்ப்போ அல்லது இறுதி ஆணையோ வழங்கியிருந்தாலோ அத்தகைய முறையீட்டினை மின் குறைதீர்ப்பாளர் ஏற்க முடியாது என்று தெரிகிறது.

**8.5** இந்த வழக்கில் மனுதாரர் மத்தகிரி கிராமம் புல எண்.387/1B–க்கு 10 HP விவசாய மின் இணைப்பு வேண்டி 29.4.2010 ம் ஆண்டு பதிவு எண். 19/2010 ஆக பதிவு செய்து உள்ளார். சுயநிதி திட்டத்தின் கீழ் மின்இணைப்பு பெற ரூ.500/– நாள் 2.7.2010 அன்று செலுத்தியுள்ளார். மேலும், தேவையான ஆவணங்களையும் சமர்ப்பித்துள்ளார். மேலும், மனுதாரர் சுயநிதி திட்ட வரிசையில் மின்இணைப்பு பெற கால தாமதமாகும் என்பதால் விகிதப்பட்டி IIIA ன் கீழ் 13.7.2010 முதல் மின்இணைப்பு பெற்று பயன்படுத்தி வருகிறார். மனுதாரர் சுயநிதி திட்டத்தின் கீழ் மின்இணைப்பு வழங்க வேண்டி உரிமதாரரை அணுகிய போது மனுதாரரிடம் IIIA- ல் பூந்தோட்ட மின் இணைப்பு

பெற்றுள்ளதால் மேற்படி மின் இணைப்பை விவசாய வீதப்பட்டி IV–ற்கு மாற்றம் செய்ய இயலாது என்று தெரிவிக்கப்பட்டது.

**8.6** மேல்முறையீட்டாளரின் கிணற்றிற்கு வீதப்பட்டி IIIA1யிலிருந்து IVக்கு மாற்றம் செய்வது என்பதுதான் கோரிக்கை. ஆனால், மேற்கண்ட கோரிக்கை தொடர்பாக மேல்முறையீட்டாளர் அவர்கள் தாக்கல் செய்த வழக்கு எண் OS No.165/2016 குளித்தலை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது என்பதால், மேல்முறையீட்டாளரின் கோரிக்கையின் சம்பந்தப்பட்ட பொருள் பற்றி வழக்கு ஒன்று நீதிமன்றத்தின் விசாரணை நிலையில் உள்ளது என்று தெரிகிறது. எனவே, மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி17(4)(ஈ)இன்படி மின்குறைதீர்ப்பாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை ஏற்றுக்கொண்டு தீர்வு எதுவும் வழங்க முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**9.** மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.38/2017 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>
**1)** திரு. வீ. தங்கராசு,
த/பெ வீரப்பன்,
மத்தகிரி கிராமம்,
கடவூர் வட்டம், கரூர் மாவட்டம்–**621 313.**

**2)** செயற் பொறியாளர்/இ&ப/குளித்தலை,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
**98**, சிறுபூங்கா தெரு, காவேரி நகர்,
குளித்தலை – **639 104.**

3) உதவி செயற் பொறியாளர்/இ&ப/சிந்தாமணிபட்டி,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11 கே.வி. துணை மின்நிலைய வளாகம்,
சிந்தாமணிபட்டி, குளித்தலை தாலுக்கா,
கரூர் – 621 301.

4) உதவி பொறியாளர்/இ&ப/கொசூர்,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
7/17 பாளையம், திருச்சி மெயின் ரோடு,
கொசூர், குளித்தலை தாலுக்கா,
கரூர் – 621 313.

5) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.3, கோவை ரோடு,
கரூர்–639 002.

6) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

7) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

8) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.